# பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி

## பாதுகாப்பு அமைச்சு

பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரியில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. சமையலாளர் (4 பதவிகள்)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**கல்வித் தகைமைகள்** : கல்விப் பொது தராதர பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு (02) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தொழில்சார் தகைமைகள்** : சமையலாளர் பதவிக்கு விதிக்கப்பட்ட தொழில்நுட்பத் திறனில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ள வகையில் தேசிய தொழிற் திறனில் (N.V.Q) இரண்டு அல்லது மூன்றாம் மட்டத்திற்குச் சமனான தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**கல்வித் தகைமைகள்** : கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு (02) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அனுபவம் மற்றும் தொழில்நுட்பத் திறன்:** சமையல் தொழிலில் 5 வருடகால அனுபவம் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனமொன்றில் மேற்கூறிய பதவியின் கடமைகளுக்கு இயைபாக தொழில்சார் பரீட்சையின் போது உறுதிப்படுத்தப்படும் NVQ 2ஆம் மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சி சகிதம் ஆரம்ப (PL1) சேவை வகுதிக்குரித்தான ஊழியர்

**சம்பள முறை** : PL 1 - 2025 (ரூபா 40,500 - 10x450 - 10x490 - 7x540 - 15x590 - ரூபா 62,530.00)

**02. உணவக ஊழியர் (5 பதவிகள்)**

**கல்வித் தகைமைகள்** : கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு (02) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சம்பள முறை** : PL 1 - 2025 (ரூபா 40,500 - 10x450 - 10x490 - 7x540 - 15x590 - ரூபா 62,530.00)

**03. கனனி தொழில்நுட்பவியாலாளர் (01 பதவி)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**தொழில்சார் தகைமைகள்** : கனனி திருத்தவேலைகள்/மோட்டார் வாகன திருத்தவேலைகளுக்கு இயைபான மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறனில் (N.V.Q) நான்காம் (04) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**தொழில்சார் தகைமைகள்** : தொடர்புடைய துறையில் ஐந்து (5) வருடகால அனுபவம் சகிதம் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறனில் (N.V.Q) நான்காம் (04) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தொழில்சார் பரீட்சையில் (Trade Test) சித்தியடைந்த ஆரம்ப அரைத் தேர்ச்சி (PL 2) அல்லது ஆரம்ப தேர்ச்சியற்ற (Pl 1) சேவை வகுதி ஊழியர்
அல்லது
வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தொழில்சார் தகைமைகள்

**சம்பள முறை** : PL 3 - 2025 (ரூபா 43,280 - 10x490 - 10x540 - 10x590 - 10x630 - ரூபா 67,040)

**04. மோட்டார் வாகன பொறியியளாளர் (01 பதவி)**

(கனனி தொழில்நுட்பவியலாளர் பதவியில் தரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் சம்பள அளவு இந்தப் பதவிக்கு ஏற்புடையதாகும்.)

**ஏனையவை:**

1. வெளிவாரி விண்ணப்பதாரிகள் 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.
2. இலங்கைப் பிரஜையாகவிருக்க வேண்டும்.
3. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உள மற்றும் உடற் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
4. சிறந்த நன்னடத்தையுடையவராக இருக்க வேண்டும்.

**நியமனத்தின் தன்மை:**

நிரந்தரம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமை சகிதம்.

**விண்ணப்பப் படிவம் அனுப்ப வேண்டிய முறை:**

பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரியின் www.dscsc.lk இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரிப் விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவங்களை 2025-11-17ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்துடன் விண்ணப்பதாரர் வசமுள்ள சகல கல்விச் சான்றிதழ், தொழில்முறை சான்றிதழ், சேவைச் சான்றிதழ், பிறப்பாத்தாட்சிப் பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றின் பிரதிகளை சுயமாக உண்மைப் பிரதியென சான்றுபடுத்தியிருத்தல் கட்டாயமாகும். தபாலில் தொலைந்துபோகும் அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணபங்கள் தொடர்பில் இந்த கல்லூரி பொறுப்பேற்காது.

தற்போது அரச, மாகாண அரச அல்லது அரை அரச துறையில் சேவையாற்றுபவர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத்தின் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

**படைத் தளபதி,**
**பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி,**
**சப்புகஸ்கந்த, மாகொல.**